ஆகையால், உங்கள் ஆட்சியில் என்ன நடைமுறை இருந்ததோ, அதே நடைமுறைதான் எங்கள் ஆட்சியிலும் இருக்கிறது. ஆகையால், பயனாளிகளின் பங்கை நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். இது அரசினுடைய விதி என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***1928—திரு. K. மாரிமுத்து:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, தில்லை விளாகம் ஊராட்சியில் புதியதாக அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்துப்பேட்டை வட்டாரத்தில் உள்ள தில்லை விளாகம் ஊராட்சியில் அரமங்காடு, கீழக்கரை, செங்காங்காடு, தில்லை விளாகம், தில்லை தெற்குகாடு 1, தில்லை தெற்குகாடு 2 மற்றும் துறைத்தோப்பு என மொத்தம் ஏழு இடங்களில் குழந்தைகள் மையங்கள், அதாவது அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் அரமங்காடு, செங்காங்காடு, தில்லை விளாகம் மற்றும் துறைத்தோப்பு ஆகிய 4 இடங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்கள் அரசு சொந்தக் கட்டடங்களிலும், கீழக்கரை மற்றும் தில்லை தெற்குகாடு-1 ஆகிய இரண்டு இடங்களில் செயல்படும் குழந்தைகள் மையங்கள் அரசு இலவசக் கட்டடங்களிலும், தில்லை தெற்குகாடு-2 மையம் மட்டுமே வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. தில்லை தெற்குகாடு 2–ல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் அந்தக் குழந்தைகள் மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும் பணி மாவட்ட

2021 செப்டம்பர் 9]

நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணி நிறைவு பெற்றவுடன் அம்மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலமோ அல்லது மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதிமூலம் அவர் பரிந்துரை செய்தாலோ, அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 7 அங்கன்வாடி மையங்கள் அங்கு இருக்கின்றன. அவற்றில் 4 மையங்களுக்கு அரசு இடம் இருக்கிறது. சில இடங்களில் அது பழுதடைந்தும் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், சில இடங்களில், தில்லை விளாகம் தெற்குகாடு 2, தில்லை விளாகம் தெற்குகாடு 1, தில்லை விளாகம் கீழக்கரை போன்ற இடங்களில் அவை வாடகைக் கட்டடங்களிலும், அரசு பள்ளிக்கூடத்திலும் இருக்கின்றன. அந்த வாடகைக் கட்டடம் என்பது ஒரு* colony *வீடு. சாதாரண மக்களுக்கு கொடுத்திருக்கிற* colony *வீட்டில் செயல்படுகிறது. அந்தக் கட்டடங்கள் அரசாங்கக் கட்டடங்களாகக் கட்டிக் கொடுக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபடி, என்னுடைய சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டுவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பரிந்துரை செய்வதாகக் கூறியுள்ளார்கள். ஆகவே, நிரந்தரக் கட்டடம் நிச்சயமாகக் கட்டிவிடலாம் எனத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருவருக்கும் நன்றி.*

வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

43—

மின் இணைப்பு

***1941—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதியில் விவசாயிகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில், விவசாயிகளுக்கு விடியலைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியில், 2021-2022 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கக்கூடிய சிறப்புவாய்ந்த இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கவிருக்கின்றார்கள்.

உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் மின் இணைப்புக்காகப் பதிவு செய்து காத்திருக்கின்ற விவசாயிகளும் இந்த ஒரு இலட்சம் மின் இணைப்புகளில் பயன்பெறவிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)